தேதி.25.08.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No.25/2017 திரு.மதியழகன், த/பெ.காளியப்பன் வா.சா.1

<u>வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி குறுக்கு விசாரணை:</u>

பிரதிவாதி எனக்கு வக்கீல் குமஸ்தா வகையில் தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதி எந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்றால் நான் பணம் கொடுத்த தேதிக்கு சுமார் ஒரு மாதம் முன்பு பணம் கேட்டார். நான் அதற்கு என்ன சொன்னேன் என்றால் யோசித்து சொல்கிறேன் என்று கூறினேன். அவர் என்னிடம் பணம் கேட்டபோது அவர் வேறு எந்த தொழிலும் செய்யவில்லை என்றால் எனக்கு தெரிந்து வழக்கறிஞர் குமஸ்தாவாக பணிபுரிந்து வந்தார். நான் கொடுத்ததாக சொல்லப்படும் நான்கு லட்ச ரூபாயை எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரொக்கமாக எனது கையிருப்பு சேமிப்பில் இருந்து எடுத்து வருகிறேன். வழக்கறிஞர் தொழிலைத்தவிர வேறு ஏதேனும் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. அந்த சமயத்தில் வரி எதுவும் செலுத்தினேனா என்றால் இல்லை. தற்போது வரை நான் வரி எதுவும் செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. அந்த தேதியில் என்னிடம் வங்கி கணக்கு இருந்தது என்றால் சரிதான். வங்கி கணக்கில் நான் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை எனது வங்கி கணக்கு சேமிப்பு கணக்கில் அந்த தேதிக்கு முன்போ அல்லது பின்போ இருந்ததா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு நான் கடன்கொடுத்த சமயத்தில் பிரதிவாதிக்கு திருமணம் ஆகிவிட்டதா என்ற விவரம் தெரியுமா என்றால் அவரின் தனிப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் தகப்பனார் வாடகை கார் வைத்து

தொழில் செய்து வந்த விவரம் தெரியுமா என்றால் அது சொந்தமான கார் வைத்து வாடகைக்கு ஒட்டிவந்தார் என்றால் என்று கேள்விப்பட்டேன். நான் சொன்ன தேதியில் பிரதிவாதிக்கு திருமணம் ஆகவில்லை என்றும், எந்த தொழிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தகப்பனார் வாடகைக்கு தான் கார் ஒட்டு வந்தார் என்றும், சொந்தமாக வீடு உள்ளது என்றும், அவ்வளவு கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எதற்கு பிரதிவாதிக்கு நான்கு லட்ச ரூபாய் கடன் தேவைப்பட்டதுஎன்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அவருடைய அவரசத்தேவைக்கு பணம் தேவைப்பட்டது என்று கூறினார். பணத்தை திருப்பி செலுத்திவிடுகிறேன் என்று கூறினார். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் அவசர தேவைக்காகத்தான் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் தற்போது நினைவில் இல்லை. குடும்பச்செலவுகளுக்கு என்று எழுதப்பட்டுள்ளது. மற்ற விவரங்கள் சேர்க்கப்பட்டிருக்கலாம். எனக்கு திருமணம் எப்போது நடந்தது என்றால் 2003ல் நடந்தது. எனது மனைவியின் சொந்த ஊர் கவுந்தப்பாடியாகும். எனது குடும்பம் கவுந்தப்பாடியில் வசித்து வருகிறது என்றால் கவுந்தப்பாடியிலும் இருந்து வருகிறோம், அரசூரிலும் இருந்து வருகிறேன். நான் எனது திருமணத்திற்கு பின்னிட்டு கவுந்தப்பாடியில் தான் குடியிருந்து வருகிறேன் என்றும் அரசூரில் குடியிருக்க வில்லை என்றால் சரியல்ல. கடனுறுதிசீட்டில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் அங்கமுத்து மற்றும் வடிவேல் ஆகியோர் கையெழுத்து செய்துள்ளார்கள். வடிவேல் சாட்சி மற்றும் கடனுறுதி சீட்டை எழுதியவர் ஆவார். அங்கமுத்து சாட்சி கையெழுத்து மட்டும் போட்டுள்ளார். அங்கமுத்து கவுந்தப்பாடியை

சேர்ந்தவர் என்றும், அவர் எனது மாமனார் வழி உறவினர் என்றால் சரிதான். அவரை நான் விசாரிக்கபோவது இல்லை என்றால் தேவைப்பட்டால் விசாரிக்க கூடும். சாட்சிகள் இருவரும் நான் சொன்னதின் பேரில் தான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு சாட்சிகளை நேரடியாகத்தெரியாது என்றால் சரிதான். வட்டி எவ்வளவு என்றால் மாதம் ரூ.100க்கு ரூ.1 கொடுப்பதாக பிரதிவாதி கூறினார். நான்கு லட்ச ரூபாயை எத்தனை ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் ஆயிரம் ரூபாய் நோட்டு நான்கு கட்டுகளாக கொடுத்தேன். நான்கு லட்ச ரூபாயை எனது வழக்கறிஞர் தொழிலில் தான் சம்பாதித்தேனா என்றால் சரிதான். மேலும் எனது தனியார் பள்ளியில் ஆசிரியராக இருந்தார். அவரது சம்பாத்தியமும் சேர்த்து தான் மேற்படி பணம் என்னிடம் இருந்தது. தாவா கடனுறுதி சீட்டு தேதியில் சத்தியமங்கலத்தில் வழக்கறிஞர் அலுவலகம் எனக்கு தற்போது உள்ள இடத்தில் தான் இருந்தது என்றால் சரிதான். நான் அலுவலகத்தில் வைத்து தான் பணம் கொடுத்தேனா என்றால் இல்லை. அரசூரில் உள்ள எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். அப்போது எவ்வளவு நேரம் என்றால் காலை சுமார் 11.00 மணியிருக்கும். கடனுறுதி சீட்டில் ஆங்கிலத்தில் வருடம் போடப்பட்டுள்ளதா அல்லது தமிழில் வருடம் போடப்பட்டுள்ளதா என்றால் இரண்டிலும் போடப்பட்டுள்ளது. எனக்கு பிரதிவாதிக்கு வட்டிக்கு பணம் கொடுத்ததுபோல் மற்ற நபர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுத்துள்ளேனா என்றால் வட்டிக்கு யாரிடமும் கொடுக்கவில்லை. நான் மஞ்சுளா என்ற நபர் மீது கோபி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.174/2018 என்ற வழக்கை என் பெயரில் வாதியாக இருந்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மஞ்சுளா

என்பவரின் மீது நான் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதிலும் நான் வட்டிக்குதான் பணம் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. மஞ்சுளாவின் மகன் வழக்கறிஞருக்கு படித்து வந்ததால் அவருக்கு கைமாறாகத்தான் பணம் கொடுத்தேன். நான் வட்டிக்குத்தான் மஞ்சுளாவிற்கு பணம் கொடுத்தேன் என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞராக இருந்து வட்டிக்கு பணம் கொடுத்து லேவாதேவி தொழில் செய்தும், சட்டப்படி வரி செலுத்தாமல் இருப்பது தவறு என்றால் பொய். பிரதிவாதியிடம் நான் யாருக்காவது வட்டிக்கு பணம் தேவை என்றால் கொடுப்பதாக சொன்னதாகவும், அதற்கு பிரதிவாதி தெரிந்தபொன்னுசாமி மகன் கண்ணன் என்பவருக்கு ஷேர்மார்க்கெட் தொழில் செய்ய ஒரு லட்ச ரூபாய் கடன் கேட்டபோது பிரதிவாதி உடன் இருந்தார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன சங்கதிகள் பொய்யானதாகும். நான் சரி என்று சொல்லி பிரதிவாதியின் முன்னிலையில் கண்ணனுக்கு ஒரு லட்ச ரூபாய் கடன் கொடுத்தேன் என்றும், அப்போது அங்கு சிவராமன் மகன் ஸ்ரீகாந்த் என்பவர் சாட்சியாக இருந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை. பிரதிவாதியும், ஸ்ரீகாந்த்தும் கூட்டாக இருக்கக்கூடும். மேற்படி கடனை அசலையும், வட்டியையும் சேர்ந்து பத்து மாத தவணையில் மாதம் 20,000/- ரூபாய் என வாய்மொழியாக பேசி முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி முன்னிலையில் கண்ணனுக்கு கடன் கொடுத்தால் செக்யூரிட்டிக்காக பிரதிவாதியிடம் வெற்று கடனுறுதி சீட்டில் கையெழுத்து பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் அந்த சமயத்தில் கண்ணனிடம் பூர்த்தி செய்யப்படாத இரண்டு காசோலைகளை

பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. பொய். நாங்கள் பேசியதுபோல் பத்து மாத தவணையில் ஒன்பது மாத தவணையை கண்ணன் செலுத்திவிட்டார் என்றும் அது சிவராமன் மகன் ஸ்ரீகாந்த்க்கும் பிரதிவாதிக்கும் தெரியும் என்றால் சரியல்ல. ஜோடிக்கப்பட்ட பொய். கண்ணன் அதிக வட்டிக்கு நிறைய பேரிடம் அதிக வட்டிக்கு வாங்கி பங்கு சந்தையில் முதலீடு செய்து நஷ்டமாகிவிட்டதால் தலைமறைவாகிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பிரதிவாதிகளின் மூலமாகவும், ஸ்ரீகாந்த் மூலமாகவும், எனக்கு நேரடியாகவும் கண்ணன் தலைமறைவான விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. தெரியாது. கண்ணன் தலைமறைவாகிவிட்டதால் பிரதிவாதியிடம் செக்யூரிட்டிக்காக வாங்கப்பட்ட கடனுறுதி சீட்டில், கடனுறுதி சீட்டில் உள்ள நபர்களுடைய துணையுடன் அதிக தொகைக்கு பூர்த்தி செய்து அதிக லாபம் அடையவேண்டும் என்ற நோக்கில் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 20.10.2015ம் தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்று பிரதிவாதிக்கு அனுப்பியிருந்தேன் என்றால் அனுப்பியிருந்தேன். தேதி நினைவில் இல்லை. பிரதிவாதி வா.சா.ஆ.3 ஆன 08.12.2015ல் பதில் அறிவிப்பை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3ஐ நான் பெற்றுக்கொண்டு அதற்கு பின்னர் ஓர் ஆண்டு கழித்து தான் வா.சா.ஆ.4 ஆன பதில் அறிவிப்பை அனுப்பியுள்ளேன் என்றும், அதில் தேவைப்பட்டால் கடனுறுதி சீட்டை நேரில் வந்து குறிப்பிட்ட தேதியில் பார்த்துக்கொள்ளலாம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு பின்னால் பிரதிவாதியும், பிரதிவாதியின் வழக்கறிஞரும் கடனுறுதி சீட்டை பார்வையிட வருவதாக சொன்னதற்கு பிரதிவாதியின் வழக்கறிஞர்

மட்டும் வரலாம் என்றும் பிரதிவாதி தனியாக வந்தால் பிரச்சனை ஏற்படக்கூடும் என்று கூறினேன். பிரதிவாதியை கடனுறுதி சீட்டை பார்வையிட அனுமதிக்காததால் அது சம்பந்தமாக 21.02.2017ம் தேதியில் பிரதிவாதி அவருடைய வழக்கறிஞர் மூலமாக ஒர் அறிவிப்பு கொடுத்தார் என்றும், அதை நான்பெற்றுக்கொண்டேன் என்றும், தற்போது என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு தான் அந்த அறிவிப்பு என்றால் பெற்றுக் கொண்டேன் ஆனால் நினைவில் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு மற்றும் அஞ்சல ஒப்புகை அட்டை பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் ஓர் ஆண்டு கழித்து வா.சா.ஆ.4ஐ கொடுத்தேன் என்றும், அதில் பிரதிவாதி ஓர் ஆண்டிற்குள் பணம் செலுத்துவதாக கூறியதால் தான் வழக்கை உடனடியாக தாக்கல் செய்யவில்லை என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் வடிவேல் என்பவருடையது அல்ல என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் பிரதிவாதி என்னிடம் எந்தக்கடனும் பெறவில்லை என்றும், அதற்கு பிரதிவாதி எந்த கடனுறுதி சீட்டும் எழுதி தரவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றும், வாதியிடம் கண்ணன் பெற்ற தொகைக்கு ஜாமீனுக்காக பிரதிவாதி கொடுத்த நிரப்பப்படாத கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது செல்லத்ததக்கதல்ல என்றால் சரியல்ல. கண்ணனும், பிரதிவாதியும் வாதியை ஏமாற்றுதவற்காக கூட்டு சேர்ந்திருக்க வாய்ப்பு உள்ளது. எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.<br><br>சார்பு நீதிபதி,<br>சத்தியமங்கலம். |

தேதி.25.08.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No. 25/2017 திரு. வடிவேல் வா.சா.2

<u>வா.சா.2: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எனக்கு சொந்த ஊர் எது என்றால் அரசூர் புதூர் ஆகும். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் நெசவு தொழில் செய்து வருகிறேன். வாதி எனக்கு உறவினர் என்றால் தூரத்து சொந்தம். வாதி வழக்கறிஞராக எத்தனை ஆண்டுகளாக தொழில் செய்து வருகிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் சுமார் 30 வருடங்களாக இருந்து வருகிறார். வாதி எந்த ஊரில் திருமணம் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அவருடைய திருமணத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. திருமணத்திற்கு பின்னர் வாதி கவுந்தப்பாடியில் குடியிருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கமாக எவ்வாறு கையொப்பம் செய்வேன் என்றால் தமிழ் மொழியில் கையொப்பம் செய்வேன். தற்போது நீதிமன்றத்தில் கையொப்பம் போட்டு காண்பிக்க முடியுமா என்றால் முடியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். அதில் E வடிவேல் என்று எப்போதும் என்னுடைய இனிஷியலுடன் தான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். பிரதிவாதியை எனக்கு தெரியுமா என்றால் பிரேம்சந்த் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி எப்போது வாதியிடம் பணம் கேட்டார் என்பதும், என்ன தேவைக்கு பணம் கேட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் இல்லை. வாதி எந்த ஆவணத்தை வைத்து வழக்கு

தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் இல்லை. நான் எதற்கு சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் பிரதிவாதி வாங்கிய பணத்தை திருப்பி செலுத்தாததால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதற்கு நான் சாட்சி சொல்லவந்துள்ளேன். மேற்படி விவரம் வாதி சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதி கடன் வாங்கியதற்கு என்ன ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு நேரடிக்கு தெரியாது என்றால் ஒரு நோட்டில் வாதி எழுதி கொடுக்கச்சொன்னார் நானும் எழுதிக்கொடுத்தேன். இரண்டு ஸ்டாம்ப் மற்றும் இரண்டு கைரேகை வைக்கப்பட்டது. எந்த தேதியில் பிரதிவாதி வாதியிடம் கடன் வாங்கினார் என்றால் 19.01.2014ம் தேதி கடன் வாங்கினார். பிரதிவாதி வாதியிடன் கடன் வாங்கியபோது உடன் யார் எல்லாம்இருந்தார்கள் என்றால் அங்கமுத்து என்பவர் இருந்தார். வாதி சொல்லி தான் நான் கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்தேன் என்றால் சரிதான். வாதி பிரதிவாதியிடம் எவ்வளவு ரூபாய் என்ன வகை நோட்டுகளாக கொடுத்தார் என்றால் நான்கு லட்ச ரூபாய், ஆயிரம் ரூபாய் நோட்டுகளாக இருந்தது. எனக்கு திருமணம் எப்போது ஆனது என்றால் நினைவில் இல்லை. கடனுறுதி சீட்டு, ஸ்டாம்ப் ஆகியவற்றை வாதி தான் கொடுத்தார் என்றால் சரிதான். என்ன செலவிற்கு என்று கடனுறுதி சீட்டில் கண்டு எழுதியுள்ளேன் என்றால் தற்போது நினைவில் இல்லை. வட்டி எவ்வளவு என்று எழுதப்பட்டுள்ளது என்றால் ரூ.100க்கு ரூ.1 என்று எழுதப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ1ல் உள்ள என்னுடைய கையெழுத்தில் இனிஷியல் இல்லை என்றால் இனிஷியல் இல்லாமல் தான் நான் கையெழுத்து செய்துள்ளேன். வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல

என்றும் வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய கையெழுத்தை கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எந்த வருடம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ஆங்கிலத்தில் மட்டும் தான் எழுதப்பட்டது. வா.சா.ஆ–1ஐ நான் எழுதவில்லை என்றும், நான் வாதிக்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ஆன கடனுறுதிசீட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றும், வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் வா.சா.ஆ.1ல் கையெழுத்து செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் எந்த விவரம் நேரடியாகத்தெரியாதுஎன்றும், என்னுடைய சாட்சியம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.